**செய்தி வெளியீடு எண்: 159** **நாள்: 28.02.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 30.12.2011 அன்று தமிழகத்தை தாக்கிய ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (28.2.2012) தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன் அவர்கள் உயர்கல்வித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 1 கோடியே 39 லட்சத்து 36 ஆயிரத்து 814 ரூபாய்.

2. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.எஸ். தாமோதரன் அவர்கள் வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 1 கோடியே 69 லட்சத்து 7 ஆயிரத்து 223 ரூபாய்.

3. மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 90 லட்சத்து 60 ஆயிரத்து 880 ரூபாய்.

4. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. வி. மூர்த்தி அவர்கள் பால்வளத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 74 லட்சத்து 62 ஆயிரத்து 274 ரூபாய்.

5. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 70 லட்சத்து 87 ஆயிரத்து 754 ரூபாய்.

6. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் அவர்கள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 25 லட்சத்து 2 ஆயிரத்து 459 ரூபாய்.

7. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. என். சுப்ரமணியன் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 88 லட்சத்து 31 ஆயிரத்து 55 ரூபாய்.

8. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 5 கோடியே 39 லட்சத்து 81 ஆயிரத்து 22 ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 11 கோடியே 97 லட்சத்து 69 ஆயிரத்து 481 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (28.2.2012) அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 128 கோடியே 29 லட்சத்து 68 ஆயிரத்து 147 ரூபாயாகும்.

******

**வெளியீடு:** இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
**நாள்:** 28.2.2012.